1975 மார்ச் 27]

Patients who Died of Rabies

* 194 *Q.*—THIRU P. R. THOMAS: Will the Hon. the Minister for Health be pleased to state:

(*a*) whether it is a fact that some patients died due to Rabies in the Government Erskine Hospital, Madurai, during the month of December 1974, inspite of the full course of preventive injections; and

(*b*) if so, the action proposed to be taken thereon to create confidence in the minds of the people regarding this prevention?

வெறி நாய்க்கடியால் இறந்த நோயாளிகள்.

திரு. பி. ஆர். தாமஸ்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:

(அ) வெறி நாய்க்கடி தடுப்பு ஊசிகள் முழு அளவுக்குப் போடப்பட்ட போதிலும், 1974ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் மதுரை அரசினர் எர்ஸ்கின் மருத்துவமனையில் நோயாளிகள் சிலர் வெறி நாய்க்கடி நோயினால் (Rabies) இறந்தது உண்மையா?

(இ) ஆமெனில், இந்நோய்த்தடுப்பு குறித்து மக்கள் மனதில் நம்பிக்கை ஊட்ட எடுக்கக் கருதியுள்ள நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) வெறிநாய்க்கடி தடுப்பு ஊசிகள் முழு எண்ணிக்கையில் போட்ட போதிலும் ஒரே ஒரு நோயாளி மட்டும் இறந்து விட்டார்.

(இ) வெறி நாய்க்கடிக்கு வெறிநாய்க்கடி தடுப்பு சிகிச்சை முறை நூற்றுக்கு நூறு பயன் தருவதில்லை. வெறி நாய் கடித்தவுடன் உடனடியாக சிகிச்சை அளிக்கப்பட்டால், அந்நோய் பற்றிக் கொள்ளும் வாய்ப்பு மிகக் குறைவு. வெறி நாய்க்கடி சிகிச்சை குறித்து பரவலான பிரச்சாரம் செய்வதன் மூலம் மக்களின் மனதில் நம்பிக்கை ஏற்படுத்தப்படுகிறது. இத்தகைய பிரச்சாரம் மருத்துவ மனை ஒவ்வொன்றிலும் செய்யப்பட்டு வருகிறது.

திரு. கே. ராஜாராம்: மாண்புமிக்க தலைவரவர்களே, கடித்த நாய் வெறிநாயாக இல்லாமல், சாதாரண நாயாக இருந்து ஊசி போட்டால், அந்த ஊசியினுடைய "ரிஆக்ஷன்" மிகவும் ஆபத்தில் கொண்டுபோய் விடுமா, உயிருக்கு ஆபத்தில் கொண்டுபோய் விடுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, நான் கேள்விப் பட்டதைத்தான் சொல்ல முடியும். சாதாரண நாய் கடித்திருந்து சந்தேகம் இருந்தால், ஊசி போடலாமென்றுதான் சொல்லுகிறார்கள். ஆனால் அதுபற்றித் திட்டவட்டமாக நான் சொல்லுவது தவறாகும்.

திரு. பி. ஆர். தாமஸ் : இந்த பாதிக்கப்பட்ட குடும்பத்திற்கு அரசு ஏதாவது உதவித் தொகை வழங்க முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : பாதிக்கப்பட்ட குடும்பம் என்ற சொல் எத்தனையோ வகையாக, எத்தனையோ நிலையில் உள்ளவர்களுக்குப் பொருந்தும். பாம்பு கடித்து இறந்து போகிறவர்கள் நிறைய இருப்பார்கள். ஆகவே நாய் கடித்தது, பாம்பு கடித்தது, பூனை கடித்தது என்று இறந்து போகிறவர்கள் பாதிக்கப்பட்டவர்கள் என்று கருதப் பட்டால், அப்புறம் வேறு மாதிரி யாருமே இறக்க மாட்டார்கள். ஆகவே அப்படி இந்தக்கருத்தை பரவலாகக் கொள்ளலாமா என்பது மிகவும் சிந்திக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

திரு. ஓய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் : இப்போது நகரங்களிலே, கிராமங்களிலே யாராலும் பராமரிக்கப்படாமல் ஊதாரித்தனமாகத் திரியும் "ஸ்ட்ரே டாக்ஸ்"ஐப் பிடிப்பதற்கு நாளுக்கு நாள் கஷ்டம் அதிகரித்துக் கொண்டிருக்கிறது. அவைகளைப் பிடிப்பதற்கு நகராட்சியிலே சரியான ஆள் கிடைக்கமாட்டானென்கிறார்கள். இதற்கு முன்னாலே, ஒரு 10 வருஷத்திற்கு முன்னாலே எல்லாம் நாயைப் பிடிப்பது "ஈசியாக" இருந்தது இப்போது அந்தத் தொழிலைக் கைவிட்டிருக்கிறார்கள். இப்போது நாளுக்கு நாள் வளர்ந்து வரும் நகரத்திலே அது மாதிரி ஒரு தொழிலைக் கைவிட்டு விடுவதற்குத்தான் நினைக்கிறார்களே தவிர, பிடிப்பதில்லை. சாமர்த்தியமாகப் பிடித்துக்கொண்டு வருவதற்கு ஏதாவது ஒரு திட்டம் தயாரிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, நாகரிகம் வளருவது என்பதே 4 அணவுக்கு நடைபெற்ற காரியம் இப்போது இரண்டு ரூபாய்க்கு நடைபெறுகிறது என்பதுதானே தவிர, அதை விட நாகரிகம் அதிகமாக வளரவில்லை. போதுமான கூலி கிடைத்து ஒரு 5 அல்லது 10 நாய்களைப் பிடிக்கின்றவர்களுக்கு ரூ. 8 அல்லது ரூ. 10 கிடைக்கும் என்றால், நிச்சயம் அதைச் செய்ய அவர்கள் தயாராக இருக்கிறார்கள். சென்னை நகரிலே இந்த நாய்களுடைய எண்ணிக்கை பெருகிவருகிற காரணத்தால், அவற்றைப் பிடிப்பதை ஒரு லாபகரமான தொழிலாக ஆக்கினால், அதைப் பிடிக்கிற தொழில் வெற்றிகரமாக நடைபெறுமென்று மாநகராட்சியினுடைய சிறப்பு அலுவலர் கருதி, இப்படி பிடிக்கப்பட்ட நாய்களுடைய எண்ணிக்கையை அந்த நாய்த் தோலைக் கணக்கிடுவதன் மூலமாக சரிபார்த்து கணக்கிட்டு, நாய்த் தோலையே பாடம் செய்து, பதனிட்டு, அதிக விலைக்கு விற்கக் கூடிய நிலைமையை இன்றைய தினம் உண்டாக்கியிருக்கிறார்கள். ஆகவே, திருச்சி, ஸ்ரீரங்கம் போன்ற இடங்களிலே உள்ள நாய்களுக்கும் கூட அந்தத் தோலுக்கு விலை கிடைக்கிற முறையிலே பிடிக்கப்பட்ட நாய்த் தோல்களைப் பயன்படுத்த ஆரம்பித்தால், நிச்சயமாக அங்கேயும் பிடிக்க ஆரம்பித்து விடுவார்கள்.

1975 மார்ச் 27]

THIRU G. VASANTHA PAI : In view of the statement just now made by the Hon. Minister that there is a profitable business going on in the sale of the skins of the dogs, will the Hon. Minister at least take precaution that good dogs are not just caught and taken away by these Dog Vans? In Sastri Nagar and its neighbouring localities, good dogs like 'Dashens' which just come out to the roadside are being caught, merely because they do not have the tokens given by the Corporation, even though they had the collar. I hope things like this will be avoided in future.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, நகரசபையிலே, நாய்களைப் பிடிப்பதைப் பொறுத்த வரையில், லைசென்ஸ் இல்லாத நாய் எதுவாக இருந்தாலும், அதைப் பிடிப்பார்கள். லைசென்ஸ் இல்லாமல் நகரங்களிலே நாய்களை வைத்திருப்பது பல்வேறு விதமான இடையூறுகளுக்குக் காரணமாக இருக்கும். ஆகவே, நகரசபை வெறி நாய்களை மட்டும் பிடிப்பது என்ற முறையை மேற்கொள்ள முடியாது. பல நாய்கள் வெறிநாய்களாக ஆகிவிடாமல் இருப்பதற்காக, சுற்றி வருகிற, யாருடைய பொறுப்பிலேயும் இல்லாத லைசென்ஸ் பெற்று அடையாளம் கட்டியிராத அப்படிப்பட்ட நாய்களைப் பிடிக்கத்தான் நேரிடும். ஜாதி நாய்கள் என்றால், லைசென்ஸும் அதனோடு எப்போதும் இருக்க வேண்டும்.

MR. *CHAIRMAN* : My dog also had the same experience but fortunately it later returned home safely.

THIRU G. VASANTHA PAI : Sir, my neighbour had a very fine dog "Dashen". One fine morning this van came and took it away, because this metal disc which is supplied by the Corporation was not tied in the collar since it was found to be harmful to this dog. I think it would be better if some other disc, in plastic or some such other, is given. Though he had taken the licence for the dog, the metal disc which was harmful to the dog was not tied in the collar. Despite the taking of the licence, the dog was taken away by the van. May I know whether such instances could be avoided?

THE HON. THIRU K. ANBAZHAGAN : Such nice dogs, when caught and taken by the van, would not be destroyed but would be kept for at least 24 hours. The public can intimate to the authorities concerned and get the dog released.

MR. CHAIRMAN : The problem of dogs seems to have drawn the attention of the hon. Members very much. Yes. **Thiru A. R. Damodaran.**

THIRU A. R. DAMODARAN : Our complaint is that they do not keep the licence. They keep it in their houses, Sir.

Watch and Ward staff in Jails

*195 *Q*.—THIRU L. BALARAMAN : Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state—

(*a*) whether there is any proposal under the consideration of the Government (i) to reduce and (ii) to revise the work-load of the Watch and Ward Staff in Jails; and

(*b*) if so, the details thereof?

சிறைச்சாலைக் காவலாளர்கள்.

திரு. எல். பலராமன் : மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்:

(அ) சிறைச்சாலைக் காவலாளர்களின் வேலைப் பளுவை (i) குறைக்க (ii) மாற்றியமைக்க அரசிடம் ஏதும் செயற் குறிப்பு உள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் விவரம் யாது ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

(பிற்பகல் 4-10)

திரு. எல். பலராமன் : தலைவரவர்களே, இந்தப் பிரச்சினை பற்றி அரசாங்கத்திற்கு சிறைக் காவலாளர்களிடமிருந்து ஏதாவது கோரிக்கை வந்திருக்கின்றதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, பொதுவாக இந்தப் பிரச்சினை பரிசீலிக்கப்பட்டு வருகிறது. இந்த ஆண்டும் அதிகமான எண்ணிக்கையில் வார்டர்களைக் கொடுக்க வேண்டும் என்ற கோரிக்கையை அத்துறைத் தலைவர் அனுப்பியிருக்கின்றார்கள். ஆண்டு தோறும் பரிசீலிக் கப்படும் ஒன்றாகும் இது.

திரு. எல். பலராமன் : தலைவரவர்களே, காவலர்கள் 24 மணி நேரமும் தங்கள் அலுவல்கள் காரணமாக சிறையிலேயே இருக்க வேண்டி இருக்கின்றது. இதைக் குறைப்பதற்காவது, அவர்களுடைய வேலைப் பளுவினைக் குறைப்பதற்காவது அரசாங்கம் இதைப் பற்றி விரைவான நடவடிக்கை எடுத்துக் கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.